# வாஸ்து ஃபின்சர்வ் இந்தியா பிரைவேட் லிமிட்டட்

## ரிசர்வ் வங்கியின் - ஒன்றிணைந்த ஆம்புட்ஸ்மேன் திட்டம் 2021 இன் சிறப்பு அம்சங்கள்

வாஸ்து ஃபின்சர்வ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (‘**நிறுவனம்**’ ) என்பது ஒரு பதிவு செய்யப்பட்ட இந்திய ரிசர்வ் வங்கியால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் ஒரு வங்கி சாரா நிதி நிறுவனம் (“NBFC”) ஆகும். இந்த நிறுவனம் ரிசர்வ் வங்கி - ஒருங்கிணைந்த ஆம்புட்ஸ்மேன் திட்டம், 2021 (‘**திட்டம்**) ஐ ஏற்றுக்கொண்டுள்ளது. RBI ஆம்புட்ஸ்மேன் செயல்பாட்டு நடைமுறைகளின் அதிகார எல்லையை சமச்சீராக நடுநிலைப்படுத்துவதன் மூலம் ‘ ஒரே நாடு ஒரே ஆம்புட்ஸ்மேன்’ என்ற குறைதீர் அணுகுமுறையை ஏற்றுக்கொள்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தத் திட்டம் தற்போது நடைமுறையிலுள்ள ரிசர்வ் வங்கியின் மூன்று ஆம்புட்ஸ்மேன் திட்டங்களை ஒருங்கிணைக்கிறது, அதாவது (i) வங்கிகளுக்கான ஆம்புட்ஸ்மேன் திட்டம், 2006; (ii) வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கான ஆம்புட்ஸ்மேன் திட்டம், 2018; மற்றும் (iii) டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கான ஆம்புட்ஸ்மேன் திட்டம், 2019.

இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் கீழே :

இந்தத் திட்டம், 100 கோடி ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துமதிப்புடன் கூடிய வாடிக்கையாளர் இடைமுகத்தைக் கொண்ட அனைத்து வைப்புத்தொகை பெறும் NBFCகள் மற்றும் வைப்புத்தொகை பெறாத NBFC க்களின் வாடிக்கையாளர்களையும் உள்ளடக்கும்

**I. புகாருக்கான அடிப்படைகள் :**

திட்டத்தின் கீழ் NBFC-யின் செயல்பாடு அல்லது விடுதல்களால் விளையக்கூடிய சேவை குறைபாடு *(கீழே வரையறுக்கப்பட்டுள்ளது)* காரணமாக மனக்குறையுற்ற பாதிக்கப்பட்ட எந்தவொரு வாடிக்கையாளரும் தனிப்பட்டு நேரில் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி மூலம் புகார் அளிக்கலாம்.

***சேவைக்குறைபாடு:*** *: என்பது ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு நிறுவனம் சட்டப்பூர்வமாக அல்லது வேறு எந்த ஒரு வகையிலும் வழங்க வேண்டிய எந்தவொரு நிதி தொடர்பான சேவைகளிலும் விளையக்கூடிய ஒரு குறைபாடு அல்லது போதாமைய என்று பொருள்படும் மற்றும் அது வாடிக்கையாளருக்கு எந்த ஒரு நிதி இழப்பு அல்லது பாதிப்பு ஏற்படாததை பொருட்படுத்தாத வகையில் இருக்கும்;*

**II. ஒரு புகார் நிலைக்கத்தக்கதாக இல்லாதிருப்பதற்கான அடிப்படைக் காரணங்கள் :**

இந்தத் திட்டத்தின் கீழ் நிலைக்கத்தகாத புகார்கள் குறித்து அறிந்து கொள்ள தயவு செய்து திட்டம் 2021 அத்தியாயம் IV பத்தி 10, இல் வழங்கப்பட்டுள்ளவைகளை காண்வும்

### III. ஆம்புட்ஸ்மேனிடம் ஒரு புகாரை சமர்ப்பிப்பதற்கான நடைமுறைகள் :

**சம்பந்தப்பட்ட NBFC க்கு எழுத்து மூலமாக தகவல் தெரிவிப்பது**

↓

**ஒரு மாத இறுதியில் அந்த குறிப்பிட்ட NBFC இடமிருந்து எந்த ஒரு பதிலும் பெறப்படாவிட்டால் அல்லது அந்த குறிப்பிட்ட NBFC அளித்த பதில் குறித்து வாடிக்கையாளர் திருப்தியடையாவிட்டால் மற்றும் வாடிக்கையாளர் எந்த ஒரு அமைப்பையும் அணுகாதிருக்கும் ஒரு நிலையில்**

↓

**NBFC இடமிருந்து பதில் பெறப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலத்துக்கு மிகாத ஒரு காலத்துக்குள் அல்லது NBFC எந்த ஒரு பதிலும் அளிக்காத நிலையில் அத்தகைய புகார் அளிக்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வருடம் மற்றும் 30 நாட்களுக்குள் RBI ஆம்புட்ஸ்மேன் இடம் ஒரு புகார் தாக்கல் செய்யலாம்**

. RBI ஆம்புட்ஸ்மேன் இடம் புகார் தாக்கல் செய்வதற்கான வழிமுறை :

[https://cms.rbi.org.in](https://cms.rbi.org.in) என்ற வலைத்தளத்தின் மூலம் ஆன்லைனில் ஒரு புகாரை பதிவு செய்யவேண்டும்

அல்லது

**எலக்ட்ரானிக் அல்லது தாள் நடை முறைகளின் மூலமாக சென்ட்ரலைஸ்ட் ரிஸீப்ட் அண்ட் பிராசசிங் சென்டருக்கு(CRPC) பின்வரும் வழிமுறைகளில் சமர்ப்பிக்கலாம் :**

| | |
|---|---|
| **மின்னஞ்சல்** | CRPC@rbi.org.in |
| **அமைவிட முகவரி** | CRPC, 4 **ஆவது தளம் செக்டார்** -17, **சண்டிகர்** – 160017 |
| **தொடர்பு மையம் (கட்டணமில்லா இலவச எண்)** | **14448** |
| **நேரம்** | **காலை** 9:30 **மணியிலிருந்து மாலை** 5:15 **மணி வரை** |

***குறிப்பு:*** *புகார் தாள் வடிவத்தில் சமர்ப்பிக்கப்பட்டால், புகார்தாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அதில் முறையாக கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும். எலக்ட்ரானிக் அல்லது தாள் நடை முறைகளின் மூலமாக சமர்ப்பிக்கப்படும் புகார்கள் RBIஆல் குறிப்பிட்டு வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய படிவத்தில் அத்தகைய தகவல்களை உள்ளடக்கியவகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**I. மேல்முறையீட்டு அணையத்திடம் மேல்முறையீடு செய்தல் :**

RBI அம்புட்ஸ்மேன் வழங்கிய புகாருக்கான தீர்வு அல்லது அதன் நிராகரிப்பு தொடர்பாக புகார்தாரருக்கு மனக்குறை இருந்தால் அத்தகைய தீர்வு வழங்கப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட தகவல் பெறப்பட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்குள் எக்ஸிக்யூட்டிவ் டைரக்டர் கன்ஸ்யூமர் எஜுகேஷன் & ப்ரோடெக்ஷன் டிபாட்மெண்ட் RBI இடம் மேல் முறையீடு செய்யலாம்

**CONTACT DETAILS OF THE PRINCIPAL NODAL OFFICER AND NODAL OFFICER OF THE VASTU FINSERVE**

வாஸ்து ஃபின்சர்வ்இந்தியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தின் தலைமை நோடால் அதிகாரி மற்றும் நோடால் அதிகாரியின் தொடர்பு விவரங்கள்

| | தலைமை நோடால் அதிகாரி | நோடால் அதிகாரி |
|---|---|---|
| **பெயர்** | திரு. அப்பண்ணன் பொன்சிவலை | மிஸ்.அங்கிதா குப்தா |

| | |
|---|---|
| முகவரி | யூனிட் எண். 203 & 204, 2வது தளம், Aவிங் ,<br>நவ்பாரத் எஸ்டேட்ஸ், ஜகாரியா பந்தர் சாலை,<br>சீவ்ரி, மும்பை 400015 |
| தொலைபேசி எண் | 18002677770 |
| மின்னஞ்சல் முகவரி : | nodalofficers@vastufinserve.com |

இந்தத் திட்ட நகல் ஒன்றை பெற விரும்பும் எந்த ஒருவரும் நிறுவனத்தின் தலைமை நோடால் அதிகாரி அல்லது நோடால் அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்

மேலும் இந்த திட்டம் குறித்த தகவல்கள் நிறுவனத்தின் - https://www.vastufinserve.com/ வலைத்தளம் and RBI இன் - https://www.rbi.org.in வலைத்தளம் மற்றும் CMS போர்டல் - https://cms.rbi.org.in. ஆகியவற்றிலும் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த திட்டம் குறித்த தகவல்கள் நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் உள்ளது மற்றும் அதைப் பார்வையிடுவதற்கு விண்ணப்பத்தின் கீழ் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும்